# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 03, 2024

Weekly E-paper ● February 03, 2024



# தமிழக விளையாட்டுக் கழகம்!

சுப. வீரபாண்டியன்

## சமூக நீதியா? மனு (அ)நீதியா?

உதயகுமார்

## இங்கு எட்டப்பர், அங்கு காவி!

தலையங்கம்

## காந்தியார் படுகொலை நாள் பொள்ளாச்சியில் நினைவேந்தல்!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 03, 2024 Weekly E-paper ● February 03, 2024


# தமிழக விளையாட்டுக் கழகம்!

## சுப. வீரபாண்டியன்

நடிகர் விஜய், தான் தொடங்கவிருக்கும் அரசியல் கட்சிக்கு, "தமிழக வெற்றிக் கழகம்" என்று பெயரிட்டு, அதனை இந்தியத் தேர்தல் ஆணையத்திலும் பதிவு செய்துள்ளார். ஒரு ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம் என்னும் நிலையில், பொது வாழ்வில் அக்கறை கொண்டு அரசியலுக்கு வருவதாகச் சொல்லும் விஜய் அவர்களுக்கு நம் வாழ்த்துகள்!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் " என்னும் வள்ளுவர் வாக்கை முன்னிறுத்தி இருப்பது நமக்கு மகிழ்ச்சி தருகிறது!

அவர் விடுத்துள்ள அறிக்கையை ஊன்றிப் படித்த போது, சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. "இன்றைய அரசியலில், நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழல் மலிந்த அரசியல் கலாச்சாரம் ஒருபுறம் என்றால், நம் மக்களை, சாதி, மத பேதங்கள் வாயிலாகப் பிளவுபடுத்தத் துடிக்கும் பிளவுவாத அரசியல் கலாச்சாரம் மறுபுறம் " என்கிறது அந்த அறிக்கை! இவற்றையெல்லாம் சரி செய்வதற்காகத்தான் அரசியலுக்கு வருகிறேன் என்று நடிகர் விஜய் கூறுகிறார். படிப்பதற்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது!

இப்படித்தான் 2019 ஆம் ஆண்டு, திரைப்படத் துறையில் இருக்கும் ஒரு பெரிய ஆளுமையிடமிருந்து அறிக்கை வந்தது. சிஸ்டமே கெட்டுக் கிடக்கிறது என்றும், அதைச் சரி செய்வதற்காகவே அரசியலுக்கு வருவதாகவும் அன்றைய அறிக்கை கூறியது. பிறகு 2020 ஆம் ஆண்டு இறுதியில், தான் அரசியலுக்குள் வரப் போவதில்லை என்று அவர் தெரிவித்து விட்டார்.

யார் ஒருவரும் அரசியலுக்கு வரக்கூடாது என்றோ, வந்தே தீர வேண்டும் என்றோ நாம் கூற முடியாது. அது அவரவர் விருப்பம், உரிமை! ஆனாலும் நடிகர் விஜய் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையை முன் வைக்க வேண்டி இருக்கிறது.



விஜய் அவர்களே, உங்கள் அறிக்கையைப் பார்த்தவுடன் பூங்கொத்தோடு பலர் புறப்பட்டு வந்து விடுவார்கள். ஒருவர் சொல்வார் – காந்தியாருக்குப் பிறகு நீங்கள் அழைத்தவுடன்தான் யோக்கியர்கள் எல்லோரும் அரசியலுக்கு வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். எனவே நான் உங்கள் கட்சிக்கு வந்து விட்டேன் என்பார். பிறகு சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அவருக்கு இடம் கொடுக்கவில்லை என்றாலும், அல்லது அவரால் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை என்றாலோ, உடனே ஊழலை ஒழிக்க மறுபடியும் வெளியில் போய்விடுவார்!

இரண்டு திராவிடக் கட்சிகளையும் வேரறுப்பதே என் வாழ்நாள் இலக்கு என்னும் "மிக உயர்ந்த நோக்கத்தோடு " இன்னொருவர் உங்களை ஆதரிப்பார். நடிகர் விஜய் அவர்களை முதல்வராக்கும் வரையில் நான் ஓய மாட்டேன் என்று சூளுரை விடுப்பார். பிறகு நீங்கள் கட்சி தொடங்குவது பற்றி மறு சிந்தனைக்கு ஆளானால், முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்று எண்ணி வந்தேன், என் கணக்கு தவறாகிவிட்டது என்று சொல்லி, உங்களையும் முள் என்று மறைமுகமாகத் தெரிவித்து விடுவார். அவருடைய அறம் சார்ந்த அரசியல் அப்படிப்பட்டது.

இவர்களைப் போன்ற பெரிய மனிதர்களிடம் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதோடு, உங்கள் அரசியல் பயணம் பற்றிய ஒரு வினாவிற்கும் விடை சொல்ல வேண்டும்!

நாட்டைத் திருத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அரசியலுக்கு வந்திருப்பதாகச் சொல்லும் நீங்கள் , திரைப்பட வேலைகளை முடித்துவிட்டு வருகிறேன் என்று கூறுகிறீர்கள். திரைப்படப் பணிதான் முதல் பணி, நாட்டைச் சீர்திருத்துவது பிறகுதான் என்று நீங்கள் கருதி இருக்கக்கூடும்! அதுவரையில் நாடும் உங்களுக்காகக் காத்திருக்க வேண்டும்! இன்னொரு வேண்டுகோளும் இருக்கிறது. நாட்டைத் திருத்துவதற்கு முன்பு, திரைப்படத் துறையிலும் சில சீர்திருத்தங்களைச் செய்து விட்டு வாருங்கள். கருப்புப் பணம் என்பது இனி எங்கும் இருக்கக் கூடாது, உங்கள் படம் உள்பட எந்தப் படத்திற்கான நுழைவுச் சீட்டும் ஒன்றுக்கு பத்தாக விற்பனை செய்யப்படக்கூடாது என்பதையும் உறுதியாகத் தெரிவித்து விடுங்கள்! உங்களின் சீர்திருத்தம் உங்கள் துறையிலிருந்தே முதலில் தொடங்கட்டும்.

இவற்றில் எல்லாம் விஜய் அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்றால், அவர் தொடங்கவிருக்கும் தமிழக வெற்றிக் கழகம், வெறுமனே தமிழக விளையாட்டுக் கழகமாக முடிந்து விடும் !

# சமூக நீதியா? மனு (அ)நீதியா?

உதயகுமார்

உயர் கல்வி நிறுவனங்களில் நேரடி நியமனத்தின் போது காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாத சூழலில் இடஒதுக்கீட்டு முறையை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அண்மையில் பரிந்துரை செய்தது. இதைத் தொடர்ந்து எழுந்த கண்டனங்களாலும், தேர்தல் நேரம் என்பதாலும் ஒன்றிய கல்வி அமைச்சகம் யுஜிசியின் பரிந்துரையை மறுத்துள்ளது.

இட ஒதுக்கீடு என்னும் சொல்லைக் கேட்டாலே தாங்கிக் கொள்ள முடியாத எரிச்சலும், வெறுப்பும் பார்ப்பனர்களுக்கு ஏற்படுகிறது. ஆண்டாண்டு காலமாகத் தங்களுக்கு மட்டுமே இடங்களை ஒதுக்கிக்கொண்டவர்களால் இன்று போட்டி போட்டுத்தான் அந்த இடத்தைப் பெற முடியும் என்கிற நிலை ஏற்படும் போது, அவர்களால் பொது சமூகத்தில் அனைவரோடும் போட்டி போட முடியவில்லை.

செண்பகம் துரைராஜன் வழக்கு தொடங்கி இன்று யுஜிசி வெளியிட்டிருக்கும் பரிந்துரைவரை இடஒதுக்கீட்டை ஒழிப்பதற்குப் பார்ப்பனர்கள் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது சூழ்ச்சி செய்து வருகிறார்கள். இந்த சூழ்ச்சிகள் பலவிதம். அவை ஒவ்வொன்றும் ஒரு விதம்.

ஒருபுறம் யுஜிசி மூலம் சமூக நீதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டை ஒழிக்க சூழ்ச்சி செய்து வருகிறார்கள். மறுபுறம் விஸ்வகர்மா யோஜனா மூலம் மனுநீதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை வேரூன்றச் செய்யத் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறார்கள். பார்ப்பனரலாதாரைக் கல்வியிலிருந்து வெளியேற்றவும், குலத்தொழிலைக் கையிலெடுக்கவும் ஒரே நேரத்தில் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்துவருகிறார்கள்.

“விளையும் பயிர் முளையிலேயே தெரியும்” என்னும் பழமொழிக்கேற்ப, 2024இல் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்ன விளைவுகளை இந்த நாடு சந்திக்கும் என்பதற்கு, அவர்களே யுஜிசி மூலம் கட்டியம் கூறியிருக்கிறார்கள். தேர்தல் நேரக் கணக்குகளால் இன்று யுஜிசியின் பரிந்துரை மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆட்சி அதிகாரம் மீண்டும் பாஜகவினர் கைகளுக்குச் சென்றால் இடஒதுக்கீடு என்னும் சமூக நீதி குழி தோண்டிப் புதைக்கப் பட்டுவிடும்.

இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்கும் போதே இதரப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கும், பட்டியல் சமூகத்தினருக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடங்கள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைக்கும் சில இடங்களையும் சூழ்ச்சி செய்து நம் மாணவர்களை அவ்விடங்களில் இருந்து விரட்டி விடுகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் உயர்கல்வி நிலையங்களில் இருந்து இடை நின்ற மாணவர்களின் பட்டியலை, மக்களவையில் ஒன்றிய கல்வித்துறை இணை அமைச்சர் வெளியிட்டார். அப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| இடைநின்ற மாணவர்கள் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| உயர்கல்வி நிலையங்கள் | OBC | SC | ST |
| மத்தியப் பல்கலைக்கழங்கள் (CUs) | 4596 | 2424 | 2622 |
| இந்தியத் தொழில்நுட்பக் கழங்கள் (IITs) | 2066 | 1068 | 408 |
| இந்திய மேலாண்மைக் கழங்கள் (IIMs) | 163 | 188 | 91 |

இடஒதுக்கீட்டின் மூலம் பார்ப்பனல்லாதார் உயர்கல்வி பயில்வதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பார்ப்பனர்கள் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் வன்மங்களை இப்பட்டியலின் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

உயர் கல்வியைத் தொடர முடியாமல் இடைநிற்கும் அவலம் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கும் நாம் இந்நிலையை மாற்றியமைக்கப் போராடுகிறோம். அதேபோல் மனுநீதியைப் பின்பற்றும் பார்ப்பனர்களும் இந்நிலையை மாற்றியமைக்க முயற்சிக்கிறார்கள். நாம் இடைநிற்றலைத் தடுக்கப் போராடினால் அவர்கள் உள்ளே நுழைவதையே தடுக்க ஆவன செய்து வருகிறார்கள். இடஒதுக்கீட்டின் மூலம் இடம் பெற்று படிக்க வந்தால்தானே அவர்களை இன்னல்களுக்கு உள்ளாக்கி இடைநிற்கச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. கல்வி நிலையங்களுக்கு உள்ளேயே வராவிட்டால், பார்ப்பனர்களுக்கு இந்த வேலையே இல்லையே. அவர்கள் ஏகபோகமாக அனைத்தையும் அனுபவிக்கலாமே. அதனால் இடைநிற்றல் என்கிற அளவுக்கு வரவிடாமல் இடத்தையே மறுத்து விடுதல் என்கிற செயல் திட்டத்திற்கு வந்திருக்கிறார்கள்.

தலைமுறை தலைமுறையாகப் பட்டப்படிப்பையே படிக்காதவர்கள் இன்னும் இந்நாட்டில் ஏராளமானோர் உள்ளனர். இடஒதுக்கீட்டைப் பெற முடியாமல் இன்னும் எத்தனையோ பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூகங்கள் தவித்து வருகின்றன. அதனால்தான் உரிய சமூகங்களுக்குச் சரியான விகிதத்தில் இடஒதுக்கீடு சென்று சேர வேண்டும் என்பதற்காக ஜாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று தொடர்ந்து நாம் போராடி வருகிறோம். ஜாதிவாரிக் கணக்கெடுப்பை முன்வைத்து நாம் அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னேறிச் செல்ல முயன்றால், இடஒதுக்கீட்டு முறையையே ஒழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு, சமூக முன்னேற்றத்திற்குப் பின்னடைவைப் பார்ப்பனர்கள் ஏற்படுத்துகின்றனர்.

எனவே இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்வதே சமூக நீதியைக் காக்க விரும்புவோருடைய முதல் கடமையாகும். ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## இங்கு எட்டப்பர், அங்கு காவி!

பா.ஜ.கவின் தொங்குதசையாக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமியின் அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவில் நிறைவேற்றப்பட்ட சட்டம், குடியுரிமைத் திருத்தச் சட்டம்.

இந்த 'மகாபிரபு' அப்போது கேட்டார் இக்குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் நாட்டில் யாராவது பாதிக்கப் பட்டார்களா? என்று.

இன்று சொல்கிறார் கூட்டணி தர்மத்திற்காக ஆதரித்தார்களாம்.

எது முக்கியம்? கூட்டணி தர்மமா, நாட்டு நலன், மக்கள் நலனா? முதுகெலும்பில்லா மண்புழுவால் எழுந்து நிற்க முடியாது. என்னதான் சிறுபான்மை, சிறுபான்மை என்று முதலைக் கண்ணீர் வடித்தாலும் பழனிச்சாமியின் நாடகம் 'ஸ்வாஹா'தான்.

இன்னும் ஏழு நாள்களில் சிஏஏ வை நடைமுறைப் படுத்துவோம் என்கிறார் ஒன்றிய இணை அமைச்சர் சாந்தனு தாக்கூர். அமித்ஷா சொல்கிறார் இந்தச் சட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது என்று. என்ன காரணம்?

முஸ்லீம்களுக்கு எதிரான இந்தச் சட்டத்தின் மூலம் பிரிவினைவாத மதஅரசியலை முன்வைத்து, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை அறுவடை செய்யப் போகிறார்களாம்.

இதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. மக்களும், தலைவர்களும், நாடும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய தேர்தல் களம், இது.

தமிழ்நாட்டின் முதலைமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் தமிழ்நாட்டில் காலூன்ற முடியாது என்று தெளிவாகவும், அழுத்தமாகவும் சொல்லி விட்டார்.

வரும் தேர்தலில் தமிழ்நாட்டில் எட்டப்பர்களையும், வடநாட்டில் பாசிசப்போலிக் காவிகளையும் துடைத்தெறிந்தால் ஒழிய, மக்களுக்கு வேறு 'விமோசனமே' இல்லை!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## காரைக்குடியில் திராவிட முழக்கம்!



30-01-2024 அன்று காரைக்குடியில் 'சமதர்ம விலாஸ்' இல்லத்தில் நடைபெற்ற "திராவிட முழக்கம்" இதழ் அறிமுகக் கூட்டத்தில் இதழாசிரியர் சுப. வீரபாண்டியன் உரை நிகழ்த்தினார்.

# காந்தியார் படுகொலை நாள்
# பொள்ளாச்சியில் நினைவேந்தல்!







பொள்ளாச்சி நகரில் *30-01-2024* அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் காந்தியார் படுகொலை செய்யப்பட்ட நாள் நினைவேந்தல் நடைபெற்றது. பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பேரவைத் துணைப் பொதுச்செயலாளர் கா.சு.நாகராசன், சண்முகவேல் பிரபாகரன், தி.மு.கழக நவநீதகிருஷ்ணன், மணிமாறன் தென்றல் உள்ளிட்ட பேரவையின் கோவை மாவட்டத் தோழர்கள், தி.மு. கழகத்தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## காரைக்குடி சுப்பையா - தத்துவமேதை டி.கே.சீனிவாசன் பிறந்தநாள் கருத்தரங்கம்!



*28-01-2024* அன்று பெரம்பூரில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தி.மு.கழகச் செய்தித் தொடர்பாளர் டி.கே. எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, சாதி மறுப்புத் திருமண இணையர்கள் மூவரை மேடையில் பாராட்டினார்கள்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian